க.பொ.த.(உ/த)

# சனநாயகம்

## அலகு 9


Mr. P.T.M. Ameen

Contact No: 0772273916

# சனநாயக ஆட்சி முறை

## சனநாயகம் அறிமுகம்

பண்டைய காலம் தொட்டு இன்றுவரை பல்வேறு வகையான ஆட்சி முறைகள் உலகில் நிலவியுள்ளன. அவ்வகையில் நிலவிய ஒன்றே சனநாயக ஆட்சி முறையாகும். சனநாயகம் என்பது மக்களாட்சியைக் குறிக்கின்ற ஒரு சொல்லாகும். இங்கு **"சன"** என்பது மக்களையும் **"நாயகம்"** என்பது தலைவனை அல்லது ஆட்சியினைக் குறிக்கின்றது. இதன் அடிப்படையில் ''**மக்களால் மக்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் ஆட்சி**'' சனநாயகம் எனப்படுகின்றது.

சனநாயக ஆட்சியை ஆங்கிலத்தில் ''**Democracy**'' என அழைக்கப்படும். இது கிரேக்க மொழியில் **"Demos"** மற்றும் **"Kratos"** எனும் சொற்களின் சேர்க்கையாகும். **"Demos"** என்பது **மக்களையும்** **"Kratos"** என்பது **ஆட்சியையும்** குறிக்கின்றது. அந்த வகையில் கிரேக்க மொழியில் இதன் பொருள் **மக்களாட்சி** என்பதாகும்.

இவ்வகையில் ஆட்சிச் செயற்பாடுகளில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மக்களின் பங்களிப்புக்கள் காணப்படுமாயின் அது சனநாயக ஆட்சிமுறை என அடையாளப்படுத்தலாம்.

சனநாயகம் என்பதற்கு பல்வேறு அறிஞர்கள் கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

**ஆப்ரகாம் லிங்கன் :** ''மக்களால் மக்களுக்கான மக்களாட்சியே சனநாயகமாகும்''

**தோமஸ் கூப்பர்** : ''மக்களுடைய மக்களுக்கான அரசாங்கமே சனநாயகமாகும்.''

**வெஸ்டர்** : ''மக்களுக்காக ஆக்கப்பட்ட மக்களுக்கு பதில் சொல்லும் ஆட்சி சனநாயகமாகும்''

**சீலர்:** சனநாயக ஆட்சி என்பது அனைவரினதும் உரிமைகளையும் பெற்றுக்கொள்ளும் ஆட்சி முறையாகும்.''

## நவீன சனநாயகம் அறிமுகம்

நவீன சனநாய ஆட்சி முறையானது குறுகிய ஒரு வரலாற்றைக் கொண்டு அபிவிருத்தியடைந்த ஒரு ஆட்சிமுறையாகும். ஐரோப்பாவில் கி.பி. 5 தொடக்கம் 15 ஆம் நூற்றாண்டு வரை நிலமானிய சமுதாயமுறை காணப்பட்டது. கி.பி. 15 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் முதலாளித்துவ வர்க்கம் தோற்றம் பொற்றதோடு ஐரோப்பாவில் தேசிய அரசுகளும் தாராண்மைவாதக் கருத்துக்களும் பரவத் தொடங்கியது. இக்காலத்திலேதான் மன்னராட்சிக்கு எதிராக ஆட்சி செயற்பாடுகளில் மக்கள் பிரதிநிதிகளின் அதிகாரம் மேலோங்கியது. இதன் போது கி.பி. 1688 இல் **பிரித்தானியாவில் ஆங்கிலப்புரட்சி (அமைதிப்புரட்சி)** ஏற்பட்டதன் பின்னர் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட **பாராளுமன்ற ஆட்சி முறை** வளர்ச்சியடைந்தது.

இங்கு சனநாயக ஆட்சி முறை எனும் போது இரண்டு அம்சங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

1. தாராண்மை சனநாயகம்
2. பிரதிநிதித்துவ சனநாயகம்

## 1. தாராண்மை சனநாயகம்

சில மேலைத்தேய கல்வியலாளர்களின் பார்வையில் தாராண்மை சனநாயகம் என்பதே சனநாயகத்தின் பிரயோக ரீதியானதும், பொருள் நிறைந்ததுமாகும். அதேபோன்று சனநாயகம் என்று கருத்துக்களை வெளிப்படுத்துவதும் ஆதிகதிக்கம் செலுத்துவதும் தாராண்மை சனநாயகமாகும். இது அனைத்து அபிவிருத்தியடைந்த மேலைத்தேய நாடுகளிலும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலும் கம்யூனிச ஆட்சி நிலவும நாடுகளிலும் வியாபிக்க வேண்டும். என்ற கருத்து கடந்த காலங்களில் நிலவிலியது. சனநாயகம் என்ற போர்வையில் இது வெளிப்படுத்தும் கருத்துக்கள் முற்றிலும் உண்மையானதல்ல. உண்மையில் தாராண்மை சனநாயகம் என்பது சனநாயகத்தின் ஒரு பரிணாமம் மட்டுமேயாகும்.

அன்றிவ் ஹேவூட் (Andrew Heywood - 1994) குறிப்பிடும் போது சனநாயகம் என்பது ஓர் அட்சி முறை மட்டுமல்ல மாறாக வாழ்விலுமாகும். இது மன்னராட்சிக்கு மாற்றீடாகவே விருத்தியடைந்தது. வாழ்வியல் எண்ணக்கருவாக நிலமானிய முறை ஆட்சியில் சமூகம் மற்றும் தனிநபர் அடக்கு முறைகளுக்கு எதிராக தோற்றம் பெற்றது.

தாராண்மை சனநாயகம் என்ற எண்ணக்கரு 17ஆம் 18ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் வளர்ச்சி பெற்ற ‘‘தாராண்மை’’ மற்றும் ‘‘சனநாயகம்’’என்ற இரண்டு எண்ணக்கருக்களின் கலவையாகும். இதில் தாராண்மை என்பது ‘‘அரசின் தலையீடுகளிலிருந்து விடுபடல்’’ என்ற கருத்தை வெளிப்படுத்துகின்றது. அதே போன்று சனநாயகம் என்பது ‘‘ மக்கள் விருப்பின் படி மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆட்சி முறையொன்றாகும்.

தாராண்மை சனநாயகம் என்ற கருத்தியலில் யாப்புறுவாதம், தனியாள் சொத்துடைமை, அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல், அரசியல் மற்றும் பொருளாதாரப் போட்டி, தேர்தல்கள், சந்தை தொடர்பான சுதந்திரம், தனியாள் சுதந்திரம், நீதித்துறை சுதந்திரம், தடைகளும் சமன்பாடுகளும், அரச மற்றும் தனியார் துறைகளுக்கிடையிலான வேறுபாடுகள் போன்ற கொள்கைளும் நடைமுறைகளும் இதில் உள்ளடங்கும். இவை சனநாயகத்திற்கு தேவையான முன்நிபந்தனைகளே அன்றி சனநாயகத்திற்காகவே காணப்படும் நிபந்தினைகள் அல்ல.

தாராண்மையின் படி அரச அதிகாரத்தை பிழையான வழிகளில் பயன்படுத்த வாய்ப்புக்களல் காணப்படுகின்றமையால் அரசின் அதிகாரத்தை வரையறை செய்து அரசு மக்களை அடக்கும் கருவியாகுவதனை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக தாராண்மைவாதிகள் உரிமைகள் பிரகடனம், சமநிலை தலையீடுகள். நீதித்துறைச் சுதந்திரம், ஊடகச் சுதந்திரம் போன்ற யாப்பு ரீதியான விதிமுறைகளைப் பயன்படுத்துகின்றனர்.

சனநாயகம் என்பது மக்கள் விருப்புடன் தொடர்புபடுகிறது எனும் போது . ஆட்சியாளர்கள் அதிகாரத்தை மக்கள் விருப்புடன் மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும் என்பதனை விளக்கிறது. மக்கள் ஆட்சியாளர்களுக்கு அதிகாரத்தை வழங்கும் செயன்முறை சுதந்திரமான தேர்தலில் வாக்களிக்கும் செயற்பாடாகும். இதன் மூலம் மக்களின் விருப்பு நடைமுறைக்கு வருகின்றது.

Ameen

தாராண்மை சனநாயகம் தேர்தல் செயற்பாடுகளை ஊடகமாக கொண்டு செயற்படுவதன் மூலம் அரசியல் சமத்துவம் என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். சனநாய ரீதியான தேர்தல் எனும் போது சர்வசன வாக்குரிமை, ஒருவருக்கு ஒரு பெறுமாணம் வழங்குதல், சுதந்திரமான தெரிவு முறை போன்ற கருத்துக்களால் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

எவ்வித பாகுபாடுமின்றி அனைவருக்கும் வாக்குரிமை கிடைக்க வேண்டும் என்பதனை சர்வசன வாக்குரிமை குறிப்பிடுகின்றது. குறித்தகாலத்தில் தேர்தல் நடைபெறுதல், போட்டித்தன்மை, சர்வசன வாக்குரிமையை பலப்படுத்த அவசியமாகின்றன.

"ஆட்சியாளர்கள் மக்கள் பிரதிநிதிகள்" என்பது சனநாயகத்தின் அடித்தளமாகும் பொதுமக்களுக்கு பொறுப்புக் கூறுவதன் மூலம் இது வெளிப்படுத்தப்படுகின்றது.

அரசியல் கட்சிகள், அரசியல் இயக்கங்கள் போன்றவற்றுக்கு இடையில் காணப்படும் போட்டித் தன்மை, அரசியல் பன்மைத்துவம் போன்றன தாராண்மை சனநாயகத்தின் அடிப்படைகள் மூலம் வெளிக்கொண்டு வரப்படுகின்றன.

தாராண்மை சனநாயகமானது பிரதிநிதித்துவன சனநாயகத்தையும் வரையறுக்கப்பட்ட அரசாங்கம் எனும் விடயத்தையும் வலியுறுத்துகிறது. இங்கு வரையறுக்கப்பட்ட அரசாங்கம் என்பது மக்களை துன்புறுத்தாது ,மக்களுக்கு பொறுப்புக்கூறக்கூடிய வரையறுக்கப்பட்ட அதிகாரமுடைய அரசாங்கமாகும்.

வரையறுக்கப்பட்ட அரசாங்கம் சனநாயக ஆட்சியில் அரசியலமைப்பிற்கு உட்பட்டு அரசியல் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டரீதியான சட்டகத்தை வழங்குவதுடன் அதுவே வரையறுக்கப்பட்ட அரசினையும் நிர்ணயம் செய்கின்றது. அவ்வகையில் ஒன்றுகூடும் சுதந்திரம், மதச்சுதந்திரம், சொத்துரிமை, கருத்துவெளிப்பாட்டுச் சுதந்திரம் , தனியாள் உரிமைகளை பாதுகாக்கும் சுதந்திரம் மற்றும் நீதிச்சுதந்திரம் போன்றன வழங்கப்படும் என உறுதியளிக்கிறது.

தாராண்மை சனநாயக அரசாங்கத்தின் மூலம் பெரும்பான்மையினரின் கீழ் வாழும் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்தல் என்ற அம்சமும் முக்கியம் பெறுகின்றது. அவ்வகையில் தாராண்மை சனநாயக ஆட்சி முறையானது தனியாள் சுதந்திரத்தையும் சிறுபான்மையினரது உரிமைகளை ஊக்குவிக்கும் அரசியலமைப்பு ரீதியான ஆட்சிமுறையாகும்.

தாராண்மை சனநாயகமானது சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட சட்டத்தின் மூலம் (Rule of Law) ஆளப்படும். மக்கள் பிரதிநிதிகளும் அச்சட்டத்திற்கு கீழ்பட்டே செயற்பட வேண்டும் என்கிறது. இது சட்டத்தின் முன் சமத்துவம் என்பதினூடாக வலியுறுத்தப்படுகின்றது. இதனால் தான் சனநாயக அரசாங்கம் அரசியலமைப்பின் வறையறைகளுக்கு உட்பட்டே செயற்பட வேண்டும் என்கிறது. இந்த சனநாயக சூழலில் அரசினால் பிரசை ஒருவருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் போது தமது உரிமைகளைப் பாதுகாக்க தேசிய அல்லது சர்வதேச நீதிமன்றங்களில் தமக்கான நிவாரணத்தைக் கோர முடியும்.

Ameen

மேற்கூறப்பட்ட விடயங்கின் படி தாராண்மை சனநாயகமானது அரசாங்கத்திற்கு சொந்தமான விடயங்கள் கருமங்கள் மீது கட்டுப்பாடுகளை விதித்து அராங்க அதிகாரத்தை ஒன்றிணைப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும் ஓர் உடன்படிக்கையாகும்.

## தாராண்மை சனநாயகமும் தாறகால உலகும்

இன்று தாராண்மை சனநாயக நாடுகள் என தன்னை அடையாளப்படுத்தும் அநேக நாடுகள் தாராண்மையின் பண்புகளை ஏற்றக்கொண்டது அந்நாடுகள் சனநாயக நாடுகாளாக மாற்றமைடைவதற்கு முன்னராகும்.

19ஆம் நூற்றாண்டானது பல நாடுகள் சனநாயக நாடுளாக மாறுவதற்கு முன்பு உள்ள காலமாக காணப்பட்டது.

அதே போன்று 19ஆம் நூற்றாண்டு காலப்பகுதியிலயே அநேகமான மேலைத்தேய நாடுகள் யாப்புறுவாத அரசாங்க இயல்பினை பெற்றுக்கொண்டது. அங்கு வாக்குரிமையானது கற்றவர்களுக்கும் வசதிபடைத்தவர்களுக்கும் மட்டுமே உரித்துடையதாக இருந்தது. ஆனால் தாராண்மை பண்புகள் தங்கள் யாப்பில் ஏற்படுத்தப்பட்டதன் பின்னர் மக்கள் வாக்குரிமையினை முழுமையாகப் பெற்றுக்கொண்டனர்.

**உதாரணமாக,**

1. பிரித்தானியாவில் தொழிலாளர் வகுப்பினர் மேற்கொண்ட போராட்டத்தின் விளைவாக சர்வசன வாக்குரிமை 1928ஆம் ஆண்டு வழுங்கப்பட்டது.
2. அமெரிக்காவில் 1966 இல் சர்வசன வாக்குரிமை முழுமையடைந்தது.
3. சுவிட்சர்லாந்தில் 1971 இல் பெண்களுக்கான வாக்குரிமை முழுமையடைந்தது.
4. இலங்கையில் 1931 இல் சர்வசன வாக்குரிமை வழுங்கப்பட்டது.

தற்காலத்தில் அனைத்து தாராண்மை சனநாயக முறைமைகளும் பிரதிநிதித்துவ அம்சங்களையும் வரையறுக்கப்பட்ட அரசாங்கத்தையும் கொண்டமைந்துள்ளன. இவ்விடயம் நாட்டுக்கு நாடு வேறுபாடு உடையதாகக் காணப்படுகின்றது. உதாரணமாக அமெரிக்க அரசியல் அமைப்பில் சனநாயக பண்புகளைப் பார்க்கிலும் தாராண்மை பண்புகள் அதிகமாகக் காணப்படுகின்றன. ஆனால் பெரிய பிரித்தானியாவில் தாராண்மைச் சனநாயகத்தில் பிரதிநிதித்துவ சனநாயகத்திற்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் இன்று அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகள் உலகப் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்த்தில் பிரதான பங்காளர்களாக காணப்படுவதனால் தேசிய பாதுகாப்புக்கே அதிக முக்கியத்துவம் வழங்க வேண்டியுள்ளது இதனால் தாராண்மையினதும் சனநாயகத்தினதும் மூலக் கொள்கைகள் பின்னடைந்துள்ளன. அத்துடன் தேசிய பாதுகாப்பின் பொருட்டு அவசரகாலச் சட்டம் , அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்தல் போன்ற தாராண்மை சனநாயகத்திற்கு அப்பாட்பட்ட விடயங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

தாராண்மை சனநாயக ஆட்சிமுறையானது முதலாளித்துவப் பொருளாதார முறையுடன் நெருங்கிய தெடர்புகளைக் கொண்டது இதனால் தாராண்மை சனநாயகம் முதலாளித்துவத்தின் வெளிப்பாடு எனப்படுகிறது.

Ameen

தாராண்மை சனநாயகம் முதலாளித்துவத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்குவதனால் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், துன்பம், வறுமை போன்றவற்றுக்கு பொருத்தமான தீர்வுகளை வழங்குவதில்லை என்பது பிரதான விமர்சனமாகக் காணப்படுகின்றது. இருப்பினும் சமூக ஏற்றத்தாழ்வு தொடர்பான இப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்காக நலன்புரி அரசு தோற்றுவிக்கப்பட்டது.

இந்நலன்புரி அரசின் பிரதான நோக்கம் அரசாங்கத்தின் தலையீட்டில் வறுமையில் வாழும் மக்களுக்கு உதவி வழங்கும் வகையில் செல்வத்தை மீள பகிர்ந்தளிப்பதாகும். இதற்காக வசதி படைத்தவர்கிளிடமிருந்து வரி அறிவிடுதல், உணவு, சுகாதாரம், கல்வி, வீடு, போக்குவரத்து போன்ற அத்தியவசிய சேவைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி அவரக்ளுக்கு அரசாங்கத்தினால் தொழிலும் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இது 1980 களில் உலகம் முழுவதும் பரவலடைந்தது.

இப்புதிய தாராண்மைவாதக் கொள்கைகள் பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் முதன்முதலாக உருவாக்கப்பட்டுள்ளது. இதன் படி சமூகத்தின் வருமாணத்தை செயற்றிறனாக பகிர்வதற்கு முதலாளித்துவ சந்தையே பொருத்தம் எனற் பழம் தாராண்மைக் கருத்து மீண்டும் தோன்றியது இக்கருத்து உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கருத்தாக மாறியுள்ளது.

Ameen

## 2. பிரதிநிதித்துவ சனநாயகம்

சமகாலத்தில் உலகில அநேக நாடுகளில் நடைமுறையில் உள்ள சனநாயகம் பிரதிநிதித்துவ சனநாயகமாகும். இது 17ஆம் 18ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பா அமெரிக்கா நாடுகளில் நிலைபெற்று வளர்ந்தது. இது முதலில் தோற்றம் பெற்றது பிரித்தானியாவிலாகும் மானியமுறை அரசாங்கத்திற்கு மாற்றீடாகவே தோற்றம் பெற்றது பிரபல்யமடைந்தது.

பிரதிநிதித்துவ சனநாயகம் தோன்றுவதற்கு முன்னர் காணப்பட்ட சனநாயக முறை நேரடி சனநாகமாகும் இது கிரேக்கத்தில் நிலவியது. இந்த நேரடி சனநாயகத்தின் பிரதான அடிப்படை யாதெனில் பெண்கள், சிறுவர்கள், அடிமைகள் தவிர்ந்த ஏனைய எல்லாப் பிரசைகளும் அரசாட்சி முறையில் நேரடியாக பங்கேற்பதாகும். இங்கு பிரசாவுரிமை பெற்ற மக்கள்தான அரசாங்கம் ஆவார்கள்.

இதன்படி நேரடி மற்றம் பிரதிநிதித்துவ சனநாயகங்களுக்கிடையில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. பிரதிநிதித்துவ சனநாயகத்தில் மக்கள் நேரடியாக ஆட்சியில் பங்குபற்றுவதில்லை மாறாக தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி மூலம் ஆட்சியின் பங்காளியாகின்றனர். இம் மக்கள் பிரதிநிதிகள் "உறுப்பினர்கள்"என்ற நாமத்தினால் அழைக்கப்படுகின்றார்கள்.

நவீன சனநாயகத்தில் அரசாங்கமுறைகளில் நேரடி சனநாயக முறைகளாக மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு (ஒப்பங்கோடல்) மீனழைத்தல், தொடக்கி வைத்தல் போன்ற முறைகள் காணப்படுகின்றன. இவ்வகையில் பிரதிநிதித்துவ சனநாயகம் நேரடி சனநாயகத்தில் குறைந்த தொடர்புகளையே கொண்டுள்ளது.

அதற்கான காரணம் யாதெனில் நவீன அரசுகளைப் பொறுத்தவரையில் பாரிய நிலப்பரப்புக்கள் , அதிகரித்த சனத்தொகை, ஒன்று சேர்ப்பதில் உள்ள சிக்கல்கள் அரசியலுடன் தொடர்புடைய மக்களின் விருப்பங்கள் மற்றும் பிரச்சினைகள் சிக்கல் தன்மை கொண்டதாகக் காணப்படுகின்றன இத்தகைய காரணிகளினால் நேரடி சனநாயக முறை சாத்தியமற்றதாகும். இதற்கு தீர்வு காணும் பொருட்டு பிரதிநிதித்துவ சனநாயக முறை தோற்றம் பெற்றது எனலாம்.

பிரதிநிதித்துவ சனநாயகத்தில் மக்கள் தங்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வதன் மூலம் மறைமுகமாக ஆட்சியின் பங்காளியாகின்றனர். இங்கு மக்களின் குரல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது அத்தோடு மக்கள் சார்பாக தீர்மானங்களை மேற்கொள்ளும் பொறுப்பு அரசியல்வாதிகளைச் சார்ந்துள்ளது.

இப்பிரதிநிதித்துவ சனநாயகத்தில் மக்களின் அதிகாரங்கள் காலத்துக்குக் காலம் வரும் தேர்தலினால் வரையறைக்குட்பட்டதாக காணப்படுவதோடு பொதுசன வாக்கெடுப்பின் போதும் மட்டுமே தமது அதிகாரத்தை நேரடியாகப் பிரயோகிக்கின்றனர்.

பிரதிநிதித்துவ சனநாயக முறையினை மக்களால் மேற்கொள்ளப்படும் ஆட்சி முறையென்று கூற முடியாவிடினும் அது மக்களுக்காக நடாத்தப்படும் ஆட்சி முறை எனக் கூற முடியும்.

இது தேர்தலை அடிப்படையாகக் கொண்டமைந்ததனால் அது **தேர்தல் சனநாயகம்** என்றும் அழைக்கப்படுகின்றது

Ameen

இப்பிரதிநிதித்துவ சனநாயகத்தில் பிரசைகளின் பங்குபற்றல் மற்றும் பொறுப்புக்களை உறுதிப்படுத்துவதற்காக தேர்தல் முறை மூலம் பாதுகாக்கக்கூடிய பல அடிப்படை நியதிகள் காணப்படுகின்றன.

1. **பொருளுடையதாக இருத்தல்** :
   அரசாங்கத்தின் ஆணையிடும் அதிகாரத்தை கொண்ட பதவிகளையே தேர்தல் மூலம் நிரப்பப்படுகின்றன. அவை சட்டவாக்கத்துடன் தொடர்புடைய அரச அதிகாரத்தை பொறுப்பேற்ம் பதவிகளாகும்.

2. **போட்டித் தன்மை**:
   தெரிவு செய்யப்படுகின்ற பதவிகளுக்கு உண்மையான போட்டித் தன்மை காணப்பட வேண்டும். போட்டியைத் தடுக்கும் சட்டம் எதுவும் நடைமுறையில் இருத்தலாகாது.

3. **சுதந்திரம்:**
   வாக்காளர்கள் சுதந்திரமான வாக்களிப்புக்களில் ஈடுபட வேண்டும். அதே போன்று இவ்வாக்களிப்புக்கு அரசோ அல்லது வெளியமைப்புக்களோ தனிநபரோ எவ்வகையிலும் தடைகளை அல்லது அச்சுறுத்தலை ஏற்படுத்தலாகாது.

4. இரகசியத் தன்மை (அந்தரங்கம்)
   வாக்காளர்களின் வாக்களிப்பு இரகசியத்தன்மை பாதுகாக்கும் வகையில் அத்தேர்தல் அமைய வேண்டும். இரகசிய வாக்கெடுப்பு என்பதே இதன் பொருளாகும்.

5. **நியாயத் தன்மை ( ஒப்பரவு):**
   வேட்பாளர்களைத் தெரிவுசெய்தல், தேர்தல் நடாத்துதல், வாக்குகளை எண்ணுதல், ஆகிய செயன்முறைகளின் போது முறையற்ற விதத்தில் செயற்படுதல், பாகுபாடு காட்டுதல், மோசடிகள் மற்றும் ஏனைய ஊழல் செயற்பாடுகள் இருத்தலாகாது.

6. **காலத்துக்குக் காலம் தேர்தல் நடாத்துதல்:**
   குறைந்தது 4 அல்லது 5 வருடங்களுக்கு ஒருமுறையேனும் தேர்தல்கள் நடாத்தப்படல் வேண்டும். இதன் மூலம் வாக்காளர்கள் தங்கள் பொறுப்புக்கூறலை பிரயோகிக்க வேண்டும்.

7. **உள்ளீரத்தல்:**
   குறிப்பிட்ட வயதிற்கு மேற்பட்ட பிரசைகளுக்கு வாக்களிக்க உரிமை இருத்தல் வேண்டும். அதாவது வாக்களிக்கத் தகுதியுடைய எவரையும் ஒதுக்கலாகாது என்பதே இதன் பொருளாகும். இங்கு இனம்,சாதி, மதம், பால், சமூக வர்க்கம் என்பவற்றுக்காக எவருக்கும் வாக்குரிமை மறுக்க முடியாது.

8. **சமத்துவம்:**

ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற ரீதியில் அனைவருக்கும் சமமான வாக்குரிமையளிக்க வேண்டும்.

இந்த வகையில் பிரதிநிதித்துவ சனநாயகத்தில் மக்களுக்காகத் தீர்மானம் மேற்கொள்வது மக்கள் பிரதிநிதிகள் என்பதனால் மக்கள் இறைமையின் குறைந்த பட்ச தலையீடாகவே பிரதிநிதித்துவ சனநாக முறையினைக் கருத முடியும். எனவேதான் பிரதிநித்துவ சனநாயகத்தில் பொறுப்புக் கூறுவது தொடர்பாக மிக முக்கியமான அம்சமாக தேர்தல் முறை காணப்படுகின்றது.

## சனநாயக ஆட்சியும் அதன் இயல்புகுளும்
## (சனநாயக ஆட்சி முறையின் பண்புகள்)

சனநாயக ஆட்சி முறையானது பல்வேறு பண்புகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது

1. யாப்புறுவாதம் (அரசியலமைப்பு)
2. மக்கள் இறைமை
3. அதிகார வேறாக்கம்
4. சமநிலைத் தலையீடுகள்
5. சட்டத்தின் ஆட்சி
6. மனித உரிமைகள்
7. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்கள்
8. மக்களுக்குப் பொறுப்புக் கூறல்

### 1. யாப்புறுவாதம் (அரசியலமைப்பு)

இது தாராண்மைவாதத்தின் அடிப்படை அம்சங்களில் ஒன்றாக இருப்பதோடு தாராண்மை சனநாயகத்தின் பிரதான அம்சங்களுள் ஒன்றாகவும் காணப்படுகின்றது. இது அரசாங்கத்தால் மக்களுக்கு ஏற்படுத்தும் அழுத்துங்களை தவிர்ப்பதற்காக சட்டத்தின் ஆட்சியை கொண்டு செல்ல முயற்சிக்கிறது. யாப்புறுவாதத்தில் சட்டத்தின் மேன்மை சட்டவாட்சி என்பவற்றை உயர்வானதாக ஏற்றுக்கொள்கின்றது
யாப்புறுவாதமானது குறுகிய மற்றும் பரந்த வகையிலான பொருள் கொண்டது.

குறுகிய நோக்கில் பார்க்கும் போது யாப்புறுவாதம் என்பது அரசியல் அமைப்பொன்றின் ஊடாக சனநாயக அரசை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்களை வகுக்கும் கொள்கையாகும். உண்மையில் யாப்புறுவாதம் என்பது அரசாங்கத்தின் அதிகாரத்தினை சட்டத்தின் மூலம் தடைகள் மற்றும் சமப்படுத்தல்களுக்குட்படுத்துவதாகும்.

பரந்த நோக்கில் பார்க்கும் போது யாப்புறுவாதம் என்பது அரசாங்க அதிகாரம் ஒன்று குவிவதனை தடுப்பதற்கும் அவ்வதிகாரங்களை தடைகளுக்குட்படுத்தும் வலையமைப்புக்களைக் கொண்டதும் தனிநபர் சுதந்திரத்தை பாதுகாக்கக்கூடியதுமான அரசியல் பெறுமதி மற்றும் எதிர்பார்ப்புக்களின் தொகுதியாகும்.

இங்கு அரசியல் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் மூலோபாயமாக எழுதப்பட்ட அரசியலமைப்பு காணப்படும். அத்தோடு உரிமைகள் சட்டம், அதிகார வேறாக்கம், ஈரவை சட்டத்துறை, சமஷ்டி அல்லது அதிகார பரவலாக்கம் செய்தல் போன்றன காணப்படும்.

## 2. மக்கள் இறைமை

இதன் பொருள் யாதெனில் அரச அதிகாரத்தின் மூலாதாரம் மக்கள் என்பதாகும். இதற்கேற்பா சட்டவாக்கம்ம், சட்ட அமுலாக்கம், நீதி வழங்கல் போன்ற அதிகாரங்களை செயற்படுத்துவதற்கு மக்களின் விருப்பு அவசியமாகின்றது. இதன் படி மக்கள் விருப்பை விஞ்சிய உயர் அதிகாரம் இல்லை என்பதே இதன் அடிப்படையாகும்.

மக்கள் இறைமை என்பது சனநாயகம் தொடர்பாக பண்டைய எண்ணக்கருவின் ஒரு பகுதியாகக் காணப்படுகின்றது. மக்கள் இறைமைக் கோட்பாடு தொடர்பாக கருத்து வெளிப்படுத்தியதில் ரூசோ முக்கியமானவராவார். இவரின் **"பொதுவிருப்பம்"** தொடர்பான கருத்து முக்கியமானதாகக் காணப்படுகிறது அதே போன்று மக்கள் இறைமையை மையப்படுத்திய மாதிரி ஒன்றாக குடியரசு மாதிரி ஒன்றைக் குறிப்பிடலாம்.

சமகாலத்தில் பாராளுமன்ற இறைமையிலிருந்து மக்கள் இறைமையையுடைய அரசாங்கம் ஒன்றை நோக்கிப் பயனிக்கின்றன. ஐக்கிய இராச்சியத்தின் மக்கள் இறைமைக்கு எடுத்துக்காட்டாக ஸ்கொட்லாந்தின் சுதந்திரம் தொடர்பான பிரச்சினையின் போது பொதுசன வாக்கெடுப்பினைப் பயன்படுத்தியமை அதே போன்று மக்கள் பிரதிநிதிகள் சபையை அதிகார பங்கீடுடைய சபையாக தோற்றுவித்தமை.

ஸ்கொட்லாந்து வேல்ஸ் மற்றம் வட அயர்லாந்து போன்ற இடங்களில் மனித உரிமைகள் சட்டத்தின் மூலம் பிரசைகளின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்ட விடயங்களை குடியாற்சியின் இயல்புகளாகக் குறிப்பிட முடியும்.

## 3. அதிகார வேறாக்கம்

அதிகாரப் பகிர்வு அல்லது அதிகார வேறாக்கம் தொடர்பான கோட்பாட்டை முன்வைத்தவர் மொண்டஸ்கியூ என்பவராவார். மன்னராட்சி முறைமைக்குப் பதிலாக தனியாள் சுதந்திரத்தைப் பாதுகாக்கக்கூடிய அரசாங்க முறையொன்றை முன்வைப்து இவரது நோக்கமாக இருந்தது. இக்கோட்பாட்டிற்காக இங்கிலாந்து முறைகளை உதாரணமாகக் கொண்டார்.

இக்கோட்பாட்டின் கருத்து யாதெனில் அரசாங்கத்தின் அதிகாரங்கள் ஒன்று குவிந்து காணப்படுமாயின் சுதந்திரம் குறைவாகக் காணப்படும். அதிகாரப் பகிர்வு காணப்படும் போது தனியாள் சுதந்திரத்திற்கான வாய்ப்புக்கள் அதிகமாகும் என்றாார. இதன்படி அரசாங்க முறைகள் ஒழுங்கமைந்துள்ள முறைகளுக்கு ஏற்ப இடைத்தொடர்புகள் காணப்படுகின்றன.

இக்கோட்பாட்டின் அடிப்படைக்கருத்தாக மொண்டஸ்கியூ அரசாங்கத்தின் அதிகாரத்தை **சட்டத்துறை, நிறைவேற்றத்துறை மற்றும் நீதிதித்துறை** என வேறுபடுத்த முடியும் எனவும் அதனை வேறுபடுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார். அங்கு தலையீடுகளும் சமநிலையும் அடங்கிய ஏற்பாட்டு முறையொன்று இருக்க வேண்டும் என்றார்.

பொதுவாக **சட்டத்துறை, நிறைவேற்றத்துறை மற்றும் நீதிதித்துறை** ஆகிய மூன்று துறைகளும் ஒரு தனிநபரிடமோ அல்லது ஒரு தனியான நிறுவனத்திடமோ குவியும் போது எதேச்சையதிகார ஆட்சி ஏற்படும் என்றார்.

Ameen

மொண்டஸகியூவின் இக்கோட்பாடானது கோட்பாடு என்ற அடிப்படையிலும் பிரயோக ரீதியாகவும் விமர்சனத்துக்குள்ளானது. அவ் விமர்சனம் யாதெனில் அதிகாரத்தை அம்மூன்று நிறுவனத்துக்குள் மட்டும் வேறுபடுத்த முடியுமா என்பதுதாகும். பெரும்பாரான சட்டத்துறைச் செயற்பாடுகளில் ஓரளவு நிறைவேற்றுத் துறை, நீதித்துறை செயற்பாடுகள் காணப்படுகின்றன.

**உதாரணம்:** அமெரிக்காவில் நீதிபதிகளை நியமிக்கும் போது நிறைவேற்று மற்றும் சட்டதுறைகள் பங்குபற்றுகின்றன.

நடைமுறையில் காணப்படும் சனநாயக ஆட்சி முறையினுள் இம் மூன்று துறைகளும் தனியாக அல்லது வெவ்வேறு துறைகளாக இருப்பது மாத்திரமன்றி சுமூகமான தொடர்பு நிலவுதல் அவசியமாகும் என்பதும் இவ்வதிகாரக் கோட்டிபட்டின் மீது எழுப்பப்படும் மற்றொரு விமர்சனமாகும்.

எனினும் சனநாயக ஆட்சி முறையினுள் இக்கோட்பாட்டின் பிரயோக ரீதியான முக்கியத்துவம் குறையவில்லை. மொண்டஸ்கியூ இக்கோட்பாட்டை முன்வைத்து அரைநூற்றாண்டு முடியும் முன்னர் உலகின் முதல் முறையாக அமெரிக்காவின் அரசியல் யாப்பை உருவாக்கியவர்கள் பயன்படுத்தினார்கள். இதக் மூலம் அதிகாரக் குவிதலினால் ஏற்படும் மக்கள் மீதான அழுத்தங்களை இல்லாமல் செய்வதற்காக இது பயன்படுத்தப்பட்டது. இன்று அதிகமான நாடுகள் மொண்டஸ்கழயூவின் அதிகார வேறாக்கல் கோட்பாட்டை பயன்படுத்தி தமது நிறுவனங்களை ஒழுங்குபடுத்தியுள்ளன.

## 4. சமநிலைத் தயைீடுகள் / தடைகளும் சமன்பாடுகளும்

தடைகளும் சமன்பாடுகளும் என்பது அரசாங்கம் தனது அதிகாரத்தை முறைகேடான வழிகளில் பயன்படுத்தி மக்கள் மீது அழுத்தங்களை பிரயோகிக்கக் கூடும் எனப் பயத்தின் விளைவாக உருவான ஒன்றாகும். இதன் நோக்கம் அரசாங்கத்தின் அதிகாரத்தை வரையறைக்குட்படுத்துவதே ஆகும்.

மொண்டஸ்கியூ வலியுறுத்தியது போன்று மூன்று துறைகளும் வெவ்வேறான துறைகளாக இருந்த போதும் ஏதேனும் உரு நிறுவனம் விஞ்சிச் செயற்படும் போது மற்றைய நிறுவனங்கள் மீது கட்டுப்பாடுகளை விதிக்குமாயின் நியாயம் மற்றும் சுதந்திரம் பாதுகாக்கப்படுவது கேள்விக் குறியாகிவிடும். ஆகவே இம்மூன்று துறைகள் தொடர்பில் தலையீடும் சமனிலையும் கொண்ட ஒரு முறைமை காணப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

சமனிலை என்பது சட்டத்துறை நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை அதிகாரங்கள் சமநிலையாகக் காணப்பட வேண்டும் என்பதாகும். தலையீடு என்பதனால் மேற்குறித்த நிறுவனம் ஒன்று எல்லை மீறிச் செயற்படும் போது மற்றைய நிறுவனம் தலையிட்டு தடைகளை ஏற்படுத்த வேண்டும்.

சமநிலைத் தலையீடுகளை செயற்படுத்த அராங்கத்தின் அதிகாரங்கள் சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை என்பவற்றுக்கு பகிரப்பட்டிருத்தல் வேண்டும். இந்நிறுவனங்கள் ஒவ்வொன்றும் தமது கருமங்களை சிறப்பாகச் செய்ய தமக்குள் ஒத்துழைப்புக்களை வழங்குதல் வேண்டும் இதற்குக் காரணம் எந்தவொரு அரசியல் நிறுவனமும் தன்னிச்சையாக செயற்படக் கூடாது என்பதற்காகும்.

Ameen

சமநிலை தலையீடுகள் காணப்படும் சிறந்த ஒரு நாடாக அமெரிக்கா காணப்படுகின்றது இங்அரசாங்க நிறுவனங்களுக்கிடையில் பின்வருமாறு தலையீடும் சமநிலையும் காணப்படுகின்றன.

சட்டத்துறையைப் பொறுத்தவரைக்கும் அமெரிக்காவின் சட்டங்களை ஆக்குவதற்கான அதிகாரங்கள் கங்கிரஸிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு சட்ட மூலம் சட்டமாவதற்கு சனாதிபதியின் அனுமதி அவசியம். இதன் படி சில சட்டங்கள் சனாதிபதி மூலமும் அரசியமைப்பிற்கு முரணான சட்டம் எனின் உயர் நீதிமன்றம் மூலமும் தவிர்க்க முடியும். இந்த வகையில் அது தடைகளுக்குட்படுகிறது. சட்டமூலம் ஒன்ற சட்டமாவதற்கு காங்கிரஸின் இரு மன்றங்களிலும் அனுமதி பெறவேண்டும். சனாதிபதியிடம் சட்ட இரத்து அதிகாரம் காணப்படினும் காங்கிரஸின் 2/3பெரும்பாண்மை மூலம் அதனை வலிதற்றதாக்க முடியும்.

நிறைவேற்றுத்துறையைப் பொறுத்தவரையில் நிறைவேற்றுத் துறையின் தலைவர் அமெரிக்க சனாதிபதியாவார். இதன் படி முக்கிய பதவிகளுக்கு ஆட்களை நியமிக்கும் போது வெளிநாடுகளுடனும் சர்வதேச அமைப்புக்களினதும் உடன்படிக்கைகள் செய்துகொள்ள முடியும். எனினும் சனாதிபதியின் பதவி நியமனங்களை உறுதிப்படுத்த செனட்சபையின் அனுமதி அவசியம். செனட் சபையானது குறித்த நியமனங்களையும் உடன்படிக்கைகளையும் மறுக்கவும் முடியும். முப்படைகளின் தலைவராக சனாதிபதி காணப்பட்ட போதும் காங்கிரஸின் அனுமதியுடனேயே யுத்த பிரகடத்தை மேற்கொள்ள முடியும். இது மட்டுமன்றி சனாதிபதிக்கு எதிராக குற்றப் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்படுவதன் மூலம் பதவி நீக்க முடியும். அக்குற்றப் பிரேரணை தொடர்பான விசாரணைக்கு பிரதம நீதியரசர் தலைமை தாங்குவார்.

நீதித்துறையைப் பொறுத்தவரையிலர் உயர் நீதிமன்றத்திடம் இருக்கும் வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரத்தை காங்திரஸிற்கு மாற்ற முடியும். அது போன்று உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்களை வலிதற்றதாக்குவதற்கு காங்கிரஸ் திருத்தங்களைக் கொண்டு வரலாம். மத்திய அரசின் நீதிபதிகளுக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டுவரவும் அவர்களைப் பதவி நீக்கவும் முடியும்

எனவேதான் அமெரிக்காவின் தடைகள் சமன்பாடுகள் முத்துறைகளினது அதிகாரங்கள் பங்கிடப்பட்டபோதும் எந்தவொரு பணியையும் பூரணமாக செய்வதற்கு எந்தவொரு நிறுவனத்தினாலும் முடியாது. இதன்படி இவ்வகையில் அரசாங்கத்தின் முன்னெடுப்புக்களை தடைகளுக்கும் சமன்பாடுகளுக்கும் உட்படுத்த முடியும்.

Ameen

## 5. சட்டத்தின் ஆட்சி

ஒரு நாட்டில் ஆட்சியைக் கொண்டு நடாத்தும் அதிகாரம் சட்டத்திடமே காணப்படுகின்றது என்பதே சட்டவாட்சியாகும். இது தாராண்மை சனநாயகத்தின் பிரதான எண்ணக்கருவாகும். சமூகத்தில் காணப்படும் ஆள்வோரும் ஆளப்படுவோரும் சட்டத்தின் அனைவரும் சமன் என்பதே இதன் எளிமையான விளக்கமாகும்.
சட்டவாட்சி தொடர்பாக அரிஸ்டோட்டில் என்பவரே முதன் முதலில் கருத்துக்களை முன்வைத்தார். தற்காலத்தில் யு.ஏ. டைசி என்பவர் காணப்படுகிறார். இவர் 1885 இல் அரசியலமைப்புச் சட்டம் என்றற பிரித்தானியாவின் சட்ட அடிப்படைகளை விளக்கியுள்ளார்.

ஆனால் சட்டவாட்சியானது அரசொன்று கட்டியெழுப்பப் படவேண்டியது சட்டத்தின் அடிப்படையாகக் கொண்டே எனும் ஜேர்மனிய எண்ணக்கருவின் மூலம் ஐரோப்பாவில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. "**சட்டபூர்வமான அரசு**" என்பதே அந்த ஜேர்மன் சிந்தனையாகும்.

அமெரிக்காவில் சட்டவாட்சி என்பது நாட்டின் உரிய சட்டமான அரசியலமைப்பு என்பதுடன் மிக நெருங்கிய வகையில் தொடர்பினைக் கொண்டுள்ளது. அங்கு சட்டவாட்சி பொதுச் சட்டத்தின் ஒரு அங்கம் என்பதோடு எழுதப்பட்ட அரசியலமைப்பின் மாற்றீடாகச் செயற்படுகிறது. அது "மனிதனின் ஆட்சி அல்ல சட்டத்தின் ஆட்சி"என்ற கூற்றினால் வெளிப்படுத்தப்படுகின்றது.

**சட்டவாட்சியின் உள்ளடக்கம்**

- ✓ சட்டத்தின் ஆட்சி என்பது அதியுயர் அதிகாரமிக்க நபர்கள் உட்பட ஆட்சி நடவடிக்கைகளில் தொடர்புறும் அனைவரும் சட்டத்திற்கு கீழ்படிந்தே செயற்படல்.
- ✓ சட்டவாக்கத்திற்கும் சட்ட அமுலாக்கத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையிலுள்ள அதிகாரத்தை சட்டரீதியான தடைகள் மூலம் வரையறுத்தல் என்பதாகும்.
- ✓ தான்தோன்றித்தனமாகப் பிரசைகளைக் கைது செய்தல், சித்திரவதைக்குட்படுத்தல், பிரசைகளின் சுதந்திரத்தை மீறுதல் ஆகிய நடவடிக்கைகளிலிருந்து அரசு விலகியிருத்தல்.
- ✓ சட்ட முறைமைகள், நீதிமன்ற தீர்ப்புக்கள் ஆகிய சட்ட ஆவணங்கள் மூலம் அரசு, அரச அதிகாரத்தின் மீது வெளிப்படையான வரையறைகளைக் குறிப்பிடல்.
- ✓ நிறைவேற்றுத்துறையின் அல்லது சட்டத்துறையின் கட்டுப்பாடுகளுக்கு உட்படாத சுதந்திரமான நீதித்துறையொன்று காணப்படுதல்.

இந்த வகையில் சட்டவாட்சி பாதுகாக்கப்படாத போது சனநாயகம் பாதுகாக்கப்பட முடியாது. அத்துடன் ஆட்சியாளர்கள் சட்டவாட்சிக்கு ஏற்ப செயற்படுகிறதா என்பதனை அவதானிக்க வேண்டும். பொதுவாக சட்டவாட்சியானது பெறுமாணங்களுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. இதன் பிரதான நோக்கம் இப்பெறுமாண்களை உறுதிப்படுத்துவதாகும்.

குறிப்பாக சட்டவாட்சியில் **சனநாயகத்தின் நியமம்சார் குறிக்கோள்களான சுதந்திரம், நியாயம், மனிதகௌரவம் மற்றும் சகிப்புத் தன்மை** ஆகிய விடயங்கள் கவனம் செலுத்தி அடிப்படையில் விருத்தி செய்தல் வேண்டும்

Ameen

## 6. மணித உரிமைகள்

மனித உரிமைகள் என்பது மனிதன் மனிதனாக வாழ்வதற்கு தேவையான அத்தியவசிய அனுமதிகள் உரிமைகளாகும். இது கௌரவமாக வாழ்வதற்கும், ஆளுமை விருத்திற்கும் மற்றம் சமூக நீதிக்கும் வழிவகுக்கும் ஒழுக்கம் சார் உரிமைகளாகும்.

தாராண்மைவாதிகளின் கருத்துப்படி அனைத்து உயிர்களுக்கும் ஒட்சிசன் எவ்வளவு அவசியமோ அது போல் மனித சமூகத்தின் நிலைப்புக்கு உரிமைகள் அவசியமாகும். மனித உரிமைகள் என்பது உல நீதிசார் உரிமைகளாகும். மனிதனாகப் பிறந்ததனால் அனைத்து மனிதர்களுக்கும் இது உரித்துடையதாகும். இது பால் வேறுபாடு இன்றி மனிதநேயத்தை அடிப்படையாகக் கொண்டு மனித உரிமைகள் நிலவுகின்றன. மனித உரிமைகள் மீறப்படும் போது அங்கு பாரிய அநீதி ஏற்படுகின்றது.

இவ்வுரிமைகளானது உருவாக்கப்பட்டவையல்ல மாறாக வெளிக்காட்டப்பட வேண்டியவைகளாகும். இது மனிதர்களது ஏற்படைய கண்டுபிடிப்புக்களாகும். முதன் முதன்முதலில் ஜோன் லொக் என்பவர் மனித உரிமைகள் பற்றி எண்ணக்கருவினை முன்வைத்தவராவார்.

மனித உரிமைகள் பழமைவாய்ந்ததாயினும் அடிமைமுறை, சாதிமுறை நிலவிய காலங்களில் எதேச்சையதிகாரம் நிலவிய காலத்தில் வெளிப்படாத ஒன்றாகக் காணப்பட்டது. பின்னர் சுதந்திர உழைப்பு, மதச்சார்பற்ற கல்வி, மற்றம் அச்சு ஊடகங்களின் தோற்றம் காரணமாக மனித உரிமைகள் உண்டு என்ற கருத்து நிவியது. இக்காலகட்டத்தில் ஜோன் லொக் மனிதனுக்கு இருக்க வேண்டிய இயற்கை உரிமைகளை அடையாளப்படுத்தினார். அத்துடன் அவ்வுரிமைகள் மனித இருப்புடன் நேரடியாகத் தொடர்புபடுகின்றது எனக் கூறினார். எனினும் வாழ்க்கை, சுதந்திரம், சொத்து ஆகிய மூன்றையும் மனித உரிமைகளின் எல்லைகளாக வரையறுத்தார்.

இதற்கு பின்னர் மனித உரிமைகள் பற்றிய எண்ணக்கரு தாராண்மைவாதம், சமவுடைமைவாதம் ஆகிய தத்துவங்களினூடாக ஊட்டம் பெற்று வளர்ச்சியடைந்தது. நடைமுறையில் மனித உரிமைகளானது சிவில், அரசியல் மற்றும் சமூகம் ஆகிய மூன்று அம்சங்களையும் உள்ளடக்கிய ஒன்றாகக் காணப்படுகின்றது.

Ameen

## 7. வரையறுக்கப்பட்ட அரசாங்கம்

வரையறுக்கப்பட்ட அரசாங்கம் என்பது அரசாங்கத்திற்கு அல்லது ஆட்சியாளர்களுக்கு எல்லையற்ற அதிகாரங்கள் இல்லை மாறாக அவர்களின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டுள்ளது என்பதனை விளக்கிறது. இதன் மூலம் தனியாள் சுதந்திரத்தினை பாதுகாத்துக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

தாராண்மை தத்துவம் இதனை விருத்தி செய்துள்ளது. அவ்வகையில் பொதுமக்களின் சுதந்திரம் மற்றும் மக்களின் உரிமைகளை மீறும் வகையில் எதேச்சையாகச் செயற்படுவதற்கான இயலுமை அரச அதிகாரத்திற்கு தெளிவாகக் காணப்படுகின்றது. அதனைத் தடுப்பதற்கு ஒரே வழி அரசாங்க அதிகாரத்திற்கு வரையறைகளை ஏற்படுத்துவதாகும்.

இவ்வகையில் அரசாங்கத்தின் அதிகாரத்தையும் அதனைச் செயற்படுத்தும் குழுவினரையும் நிறுவன ரீதியாக வரையறைகளுக்கும் தடைகளுக்கும் உட்படுத்துகின்றது. இக்கொள்கையினை முதன் முதலில் முன்வைத்தவர்கள் ஜோன் லொக், மொண்டஸ்கியூ போன்றோர்கள் ஆவார். இதன் படி வரையறுக்கப்பட்ட அரசாங்கம் மனிதனின் ஆட்சியல்ல சட்டத்தின் ஆட்சி என்ற கொள்கைக்கு உட்படுகின்றது.

பிற்காலத்தில் வரையறுக்கப்பட்ட அரசாங்கம் என்பதனை விருத்தி செய்வதில் பல விடயங்கள் சேர்க்கப்பட்டன.

1. **அதிகார ஒப்படைப்பு:** அரசாங்கம் வைத்திருக்கும் அதிகாரம் பொதுமக்களிடமிருந்து நிபந்தனைகளின் அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டதாகும். ஆட்சயாளர்களுக்கு மக்களால் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது தேர்தல் சந்தர்ப்பத்திலாகும்.
2. **நிபந்தனைக்குட்பட்ட பொறுப்பு**: ஆட்சியாளர்களின் அதிகாரம் நிபந்தனைகளுடனானது. இது பொதுமக்கள் அவர்களை தேர்ந்தெடுத்த போது வெளிப்படுத்திய விசுவாசமாகும். இதில் பொதுமக்களின் சுதந்திரம் மற்றும உரிமைகளை மீறும் அளவுக்கு அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தல் கூடாது என்பதாகும்.
3. **வரையறுக்கப்பட்ட பதவிக்காலம்**: அரசாங்கம் ஒன்றினை வரையறுக்கப்ப்ட காலத்திற்கே நியமிக்கின்றனர். இது பொதுவாக 4 அல்லது 5 ஆண்டுகளாகும். பொதுமக்களின் அனுமதியின்றி அப்பதவிக் காலத்தை தாண்டிச் செல்ல சட்டப்படியான அதிகாரம் இல்லை.
4. **சட்ட**த்தின் ஆட்சி: அரசாங்கம் தமது அதிகாரப் பலத்தினை செயற்படுத்துவது தொடர்பில் சட்டரீதியான தடைகளை ஏற்படுத்துவது இக்கொள்கையாகும்.
5. **அதிகார வேறாக்**கம்: இதன் நோக்கம் அராங்கத்தின் அதிகாரத்தினை ஒரு நபரிடமோ அல்லது ஒரு நிறுவனத்திடமோ குவிக்கப்படுவதனை தடைசெய்வதாகும்.
6. **தடைகளும்** சமன்பாடுகளும்: அரசாங்கத்தின் கிளை நிறுவனங்கள் அரச அதிகாரத்தை கொண்டு மக்களை துன்பத்துக்குள்ளாக்குவதனை தடுப்பதாகும்.

Ameen

## 8. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்

இது பிரதிநிதித்துவ சனநாயம் மற்றும் நடைமுறையுடன் தொடர்புடைய பொறிமுறையாகும். ஆனால் சனநாயக ஆட்சியில் தேர்தலானது சுதந்திரமானதாகவும் நியாயமானதாகவும் இருக்க வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றது.

சுதந்திரமான நீதியான தேர்தல் என்பது அண்மைக் காலத்தில் விருத்தியடைந்த ஒன்றாகும். இந்நிலை இலங்கை உட்பட பல நாடுகளில் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற சுதந்திரமற்ற நியாயாமற்ற தேர்தல்களின் எதிரொலியாகும்.

அவ்வாறான சந்தரப்பங்களில் வேட்பாளர்களை அச்சுறுத்துதல், ஊழல், பொதுச் சொத்துக்களின் முறையற்ற பாவனை, வாக்களித்தல், வாக்கெண்ணல் மற்றம் பெறுபேறுகளை வெளியிடல் போன்றவற்றில் முறைகேடுகள் ஏற்படுகின்றன. இதனால் சனநாயகச் செயன்முறை திரிவடைகின்றது. தேர்தலின் நியாயத் தன்மை பாதிக்கின்றது. பொதுமக்கள் நடைமுறையில் காணப்படும் அரசியலில் நம்பிக்கை இழக்கின்றனர். இதனாலேயே சமகாலத்தில் அரசியலில் தேர்தல் தொடர்பான கலந்துரையாடல்கள் முக்கியம் பெறுகின்றன.

இதன் படி சுதந்திரமான நியாயமான தேர்தல் தொடர்பாக பல எண்ணக்கருக்கள் எழுந்துள்ளன.

1. **மக்கள் இறைமை**: மக்களுக்கு தமது விருப்பு மற்றும் தீர்மானங்களை வெளிப்படுத்த மிக முக்கியமான பொறிமுறையாக தேர்தல் காணப்படுகின்றது. இதனால் தமது ஆட்சியாளர்களை தெரிவு செய்வதற்கான சுதந்திரம் தங்கு தடையின்றி உறுதிப்படுத்தப் படல் வேண்டும்.
2. **தெரிவுச் சுதந்திரம்**: தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதில் வெளித்தடைகள் எதுவும் இல்லாது இருக்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது.
3. **பொதுமக்களுக்கு பொறுப்புக்கூறல்**: தேர்தலானது தமது ஆட்சியாளர்களின் செயலாற்றுகை தொடர்பில் பொதுமக்கள் தீர்மானம் எடுக்கும் சிறந்த வாய்ப்பாகும் அதனால் சனநாயக ரீதியான பொறுப்புக்கூறலுக்கு தடைகள் இருத்தல் கூடாது.
4. **பொதுமக்களின் விருப்பு மற்றும் அங்கிகாரம்**: சனநாயக ஆட்சி முறையானது பொது மக்களின் ஒப்புதல் எனும் கொள்கையல் தங்கியுள்ளது. இதில் ஆட்சியாளர்களை சுயாதீனமாக தீர்மானிக்கும் உரிமை மக்களுக்கு உண்டு. இதனால் ஆட்சியாளர்கள் ஆட்சி செய்வதற்கான சட்டரீதியான அங்கிகாரத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். தேர்தலின் சுதந்திர் நியாயம் என்பன பாதிக்கப்படும் போது அங்கு ஆட்சியாளர்களுக்கு கிடைக்கும் சட்டரீதியான தன்மையும் பொதுமக்களின் அங்கிகாரமும் இல்லாமலாக்கப்படும்.
5. **மக்**களுக்குப் பொறுப்புக் கூறல்: பொதுமக்களுக்கு பொறுப்புக் கூறுவதனை சனநாயக ஆட்சியின் நடைமுறை அம்சம் எனலாம். அதாவது ஆட்சியாளர் ஒருவரது நடத்தை தொடர்பாக பொதுமக்களுக்கு பதிலளித்தல் என்பதாகும். ஏனெனில் அரசியலின் மூலாதாரம் மக்களாவர். பதவியிலிருப்பவர்கள் அவர்கிள் தீர்மானங்கள் செயற்பாடுகள் தொடர்பில் மக்களுக்கு பொறுப்புக்கூறுவதனை தட்டிக்கழிக்க முடியாத சனநாயக செயற்பாடாகும்.

Ameen

பொறுப்புக்கூறலானது இருவகைகளில் காணப்படுகின்றன.

1. மக்களுக்கு பொறுப்புக்கூறல்
2. பொறுப்புடையவர்கள் என்ற வகையில் மக்கள் அரசாங்கத்தின் செயற்பாடுகளை எதிர்பார்த்தல்.

மக்களுக்கு பொறுப்புக் கூறுவதற்கான பொறிமுறை

1. வாக்களிக்கும் நடைமுறைகளினூடாக அரசாங்கத்தின் செயற்பாடுகளை தீர்மானிக்க மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்குதல்.
2. கருத்துக் கணிப்பு
3. அரசாங்க அதிகாரிகளி நடத்தைகளை உறுதிப்படுத்துவதற்கான ஒழுக்கக் கோவைகள் மற்றும் சட்டதிட்டங்களை உருவாக்குதல்.

அரசாங்க பதவிகளில் உள்ளவர்களின் தவறுகளை தடுத்து வழிகாட்டல்களை வழங்குவதே இதன் பிரதான நோக்கமாகும். இதற்காக

1. அநேக நாடுகள் தகவலறியும் சட்டத்தை உருவாக்குகின்றன (RTI - Right for information)
2. ஒப்பீட்டு ரீதியான நவீன பகுப்பாய்வு மற்றும் கணக்காய்வு நிறுவனங்களை தாபித்துள்ளன.

Ameen

## சனநாயக ஆட்சி முறையும் இலங்கையின் அனுபவங்களும்

சனநாயக ஆட்சி முறை இலங்யையின் வெற்றிகள் பின்னடைவுக் மற்றுமும் மறுமலர்ச்சிய ஆகியவற்றின் கலப்பாக காணப்படுகின்றது.அவ்வகையில் நவீன சனநாயக வாதம் பிரத்தானியாவின் காலனித்துவத்தின் கீழ் இருந்த போது மட்டுப்படுத்தப்பட்ட பிரதிநிதித்துவ முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் 1833 இல் பொருளாதார மற்றும் சமூகத் துறைகளில் தாராண்மை முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

இருப்பினும் இலங்கையை சனநாயகமயமாக்கல் செயன்முறையில் 1931 டொனமூர் சீர்திருத்தம் முக்கிய பங்காற்றியது. அதில் சர்வசன வாக்குரிமை, பிரதிநிதித்துவ ஆட்சிமுறையினை விரிவாக்கியமை என்பன பிரதான கொள்கைகளாகும். அதே போன்று சிறந்த சிலவில் சமூகம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டமை, தேசிய இயக்கம் மற்றம் தொழிற்சங்கங்களின் செயற்பாடு என்பன சனாநயாகச் செயற்பாட்டிற்கு காரணமாக அமைந்தன.

1947 இல் சோல்பரி அரசியல் அமைப்பினூடாக தாராண்மை சனநாயக அரசாங்க முறை கட்டியெழுப்பப்பட்டது. இதன் மூலம் பிரதிநிதித்துவ சனநாயகம் மேலும் விரிவடைந்தது. இங்கு ஈரவைச் சட்டமன்றம், பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறும் அமைச்சரவை, சட்டத்தின் ஆட்சி. சுயாதீன நீதித்துறை, சிறுபான்மைக் காப்பீடுகள் மற்றும் வரையறுக்கப்பட்ட அரசாங்கம் என்பன முக்கியமானவைகளாகும்.

1970 வரை சனநாயக அரசாங்க முறை தடைகளின்றி செயற்பட்டது. இங்கு தேர்தல்கள் குறித்தகாலத்தில் நடைபெற்றன, அரசாங்கத்தை மாற்றும் செயற்பாடுகள் அமைதியாக நடைபெற்றது, தேர்தல் செயற்பாடுகளில் மக்கள் பங்குபற்றினார்கள். ஆனால் சிங்கள தமிழ் இனப்பிரச்சினையும் அரசாங்க விடயங்களில் பாரிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்க வில்லை.
ஆனால் 1970 இன் ஆரம்ப காலங்களில் இச்சனநாயக முறைகள் பல மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. முக்கியமாக 1971 இல் ஏற்பட்ட இளைஞர் கிளர்ச்சி இதற்கு சான்றாகும். தமிழ் தேசிய இயக்கம் தனி அரசொன்றிற்கான இயக்கமாக மாற்றமடைந்தது. 1980 இது சிவில் யுத்தமாக மாற்றமடைந்தது. யுத்த செயற்பாடுகள் காரணமாக சனநாயகச் செயற்பாடுகள் பின்னடைவை அடைந்தன.

1978 காலப் அரசியல் யாப்பில் சனநாயக அம்சங்கள் மேலும் பின்னடைவை அடைந்தன. இங்கு வெஸ்ட்மினிஸ்டர் மாதிரியிலிருந்து விலகி பிரான்ஸிய முறையில் அமைந்த சனாதிபதி ஆட்சி கொண்டுவரப்பட்டது. இதனால் சட்டத்துறையானது நிறைவேற்றுத்துறைக:கு கீழ்நிலையை அடையும் நிலை ஏற்பட்டது. சனாதிபதி சட்டத்துறையையும் நீதித்துறையையும் நிருவகிக்கும் நிலை ஒன்று உருவானது. இது தடைகள் சமநிலையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தது. இதனால் பல பாதகமான அம்சங்கள் நடைபெற்றன. இதனை பேராசிரியர் மிக் மூவர் என்பவர் **"சனநாகயம் பின்நோக்கிச் செல்லல்"** என்கிறார். கலாநிதி நீல் டியோட்டா "அரசியல் வீழ்ச்சி" **என்றார். அதே போன்று சனநாயகத்தின் நலிவு என்றார்.**
இருப்பினும் 1978 யாப்பில் பிரசைகளுக்காக அடிப்படை உரிமைகள் என்ற அத்தியாயம் ஒன்று உருவாக்கபட்டதனை முக்கிய சனநாயக அம்சமாக குறிப்பிடலாம். இருப்பினும் இக்காலப்பகுதியின் முக்கிய பண்பு சனாநாயகத்தினை மீள உருவாக்குவதற்கான இயலுமை என்பதாகும்.

Ameen

இங்கு யாப்புசார் அதிகாரவாதம், சிவில் யுத்தம், வன்முறை மற்றும் யுத்தமயப்படுத்தல் போன்ற அம்சங்களினால் சனநாயகம் முற்று முழுதாக இல்லாது போய்விடவில்லை குறைபாடுகள் காணப்பட்ட போதும் சில சனாநாயக அம்சங்கள் காணப்பட்டன. முக்கியமாக பொது மக்களிடம் சனநாயகம் தொடர்பான நம்பிக்கை தெடர்ந்து காணப்பட்டது. அதே போன்று வன்முறைகளுக்கு மத்தியிலும் தேர்தல்கள் நடைபெற்றன. யுத்தம் இருந்த போதும் அரசாங்கம் சுமுகமாக நடைபெற்றது. இருப்பினனும் 1978 அரசியல் அமைப்பை நீக்குதல் சனாதிபதி முறைக்கு பதிலாக பாராளுமன்ற ஆட்சியினைக் கொண்டவருதல் போன்ற யாப்பின் முக்கிய மறுசீரமைப்புக்களாக இருந்தன.

## இலங்கை அரசயில் அமைப்பில் காணப்படும் சனநாயக அம்சங்களும் சனநாயகம் சாராத அம்சங்களும்.

**இலங்கை அரசயில் அமைப்பில் காணப்படும் சனநாயக அம்சங்கள்**

- ✓ **சர்வசன வாக்குரிமை முறையும் பிரதிநிதித்துவ சனநாயக முறையும்.**
  இலங்கையில் இன்று சர்வசன வாக்குரிமையின் மூலம் மக்கள் தமக்கு விருப்பமான பிரதிநிதிகளை பூரண சுதந்திரம் காணப்படுகின்றமை முக்கியமான சனநாயக அம்சமாகும்

- ✓ **சட்டத்துறை உறுப்பினர்கள் மக்கள் வாக்கினால் தெரிவு செய்யப்படுகின்றமை**
  மக்கள் தமது வாக்கினால் தமக்கு விருப்பமான பிரதிநிதிகளை சட்டமன்றத்திற்கு தமது பிரதிநிதியாக அனுப்பும் சூழல் இங்கு காணப்படுகின்றது. இதனால் இவ்வாறு தெரிவு செய்யப்படுத் பிரதிநிதிகள் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்துவார்கள்.

- ✓ **பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறும் அமைச்சரவை**
  பாராளுமன்றத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சில் உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ள அமைச்சரவையானது பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற கடமைப்பட்டுள்ளது. இந்த அமைச்சரவையான செய்த செய்யாது விட்ட செய்யப்போகும் விடயங்கள் தொடர்பாக எந்தவொரு பாராளுமன்ற உறப்பினரும் கேள்வி கேட்க முடியும் அதற்கு பதிலளிப்பது அமைச்சரவையின் கடமையாகும்.
- ✓ **சட்டங்களை அனுசரிக்கும் தேர்தல்கள்**
  இலங்கையில் பல தேர்தல்கள் காலத்துக்குக் காலம் நடைபெறுகின்றன. இது சட்டத்தின் நெகிழ்வுத்தன்மைக்கே நடாத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்தாக இருக்கின்றமை சனநாயகத்தின முக்கிய அம்சமாகும்.
- ✓ தேர்தல்களில் உயர்ந்தபட்ச வாக்காளர் பங்கேற்பு
- ✓ ஒப்பீட்டு ரீதியாக சுயாதீன நீதித்துறை
- ✓ சிறிய கட்சிகள் பலவற்றுடன் கூடிய ஒரு கட்சி ஆதிக்கத்துடன் கூடிய இருகட்சி முறைகள்.
- ✓ அரசியல் அமைப்பை சார்ந்த ஆட்சி முறை.
- ✓ அரசியல் அமைப்பினல் உறுதிப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமைகள்
- ✓ அதிகாரப் பரவலாக்கம்
- ✓ செயலூக்கமுள்ள சிவில் சமூகம் மற்றும் சமூக இயக்கங்கள்
- ✓ சிவில் யுத்தம் அரசியல் வன்முறைகள் மற்றம் பின்னடைவுகளின் மத்தியிலும் சனநாயகம் தொடர்ந்து செயற்படுகின்றமை.
- ✓ சனநாயம் தொடர்பில் மக்களின் நம்பிக்கை. போன்ற பல விடயங்கள் காணப்படுகின்றன.

Ameen

### சனநாயகம் சாராத அம்சங்கள்

இலங்கை அரசியல் யாப்பில் பல சனநாயகத்திற்கு விரோதமான விடயங்களும் காணப்படுகின்றன. என்பது முக்கியமான விடயமாகும் அவ்வகையில்

- ✓ நிறைவேற்று அதிகார முறைமை
- ✓ அரச அதிகாரம் மிகையாக குவிந்திருத்தல்
- ✓ சட்டத்துறை நீதித்துறை நிறைவேற்றுத் துறைக்கு கீழ் படிதல்
- ✓ அரசியல் வன்முறைகள் சிவில் யுத்தம்
- ✓ சுதந்திரமான தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்படுதல்.
- ✓ அரசும் சிவில் சமூகமும் யுத்தமயப்படுத்தலுக்கு உட்படுதல்.
- ✓ அவசரகாலச் சட்டம்
- ✓ அடிப்படை உரிமைகளைத் தடைசெய்தல்
- ✓ மனித உரிமை மீறல்கள்
- ✓ அரசாங்கத்தின் ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோககங்கள்

### இலங்கையும் சனநாயகத்தின் பொருத்தப்பாடும்

சனநாயக அரசாங்க மாதிரிகள் பல உலகில் காணப்படுகின்றன. சில அரசாங்கங்கள் தாராண்மை சனநாயகத்தை பின்பற்றுகின்றன. வேறுசில சனநாயகத்துடன் தாராண்மைவாதமற்ற அதிகாரவாதம் சேர்ககப்பட்டுள்ளன. இன்னும் அதே போன்று பலமான சனநாயக அரசாங்கங்களைப் போன்று பலமற்ற சனநாயக அரசுகளும் காணப்படுகின்றன. இதில் இலங்கையானது சனநாயக அரசாங்க முறை எனக் கூற முடியும். அதற்கு பல காரணங்களை நாம் முன்வைக்க முடியும்.

இருபதாம் நூற்றாண்டு காலப்பகுதியில் சர்வசன வாக்குரிமை, பிரதிநிதித்துவ சனநாயக சம்பிரதாயம், பாராளுமன்ற சனநாயகம், பொதுமக்களின் வாக்குகளால் மாற்றப்படும் அரசாங்கம் போன்ற பல விடயங்கள் இலங்கை கலாசாரத்தில் வலுவூண்றி இருந்தன.

இலங்கையான பல்லினசமூகம் வாழும் இரு நாடாகும் இனப்பல்வகைமையினை ஒரு பிரச்சினையாகவன்றி ஒரு வலிமையான ஒன்றாக சனநாயகம் கருதுகின்றது. இதனால் தான் இலங்கைக்கு பன்மைத்துவவாத அரசாங்க முறைமை தேவைப்படுகின்றது. அதற்கு இருக்கும் ஒரேயொரு முறை சனநாயக அரசாங்க முறையாகும்.

அரசியல் வன்முறைகள் சிவில் யுத்தம் என பல பிரச்சினைகளுக்கு மத்தியிலும் சனநாயக அரசியல் அமைப்பில் நாம் வைத்திருந்த நம்பிக்கையினை இலங்கை மக்கள் பல முறை வெளிப்படுத்தியுள்ளனர். அதாவது தேர்தல்களில் உயர்ந்த மட்டத்தில் வாக்காளர்கள் பங்காற்றியுள்ளனர். இலங்கை மக்கள் சனநாயகமற்ற அரசியல் மாற்றங்களை வன்மையாகக் கண்டித்துள்ளனர். இவ்வகையில சனநாயகமற்ற செயற்பாடுகளுக்கு மிகக் குறைந்த மக்களே ஒத்துழைப்பு வழங்குவர்.

இலங்யில் உயர்மட்ட கல்வியறிவு , அரசியல் ஞானம் போன்றவற்றின் அடிப்படையில் சனநாயக அரசாங்கமே பொருத்தமானதாகும். இங்கு உயர்மட்ட அரசியல் பங்குபற்றுதலை சனநாயகத்தால் மட்டுமே ஏற்படுத்த முடியும். இவ்வகையில் இலங்கைக்கு பொருத்தமான ஒரேயொரு அரசாங்க முறை சனநாயக அரசாங்க முறையாகும் எனக்கூறுவதில் மிகையாகாது.

Ameen